Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

## வைத்தியசாலை ஊழியர் டீசல் எடுத்துவர மறுப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் டீசல் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலையிலுள்ள பெரிய ஜெனரேட்டர் இயங்குவதற்குக் கூட டீசல் இன்மையால் அதனை இயக்க முடியாது உள்ளது.

இதனை நிவர்த்திசெய்யும் வகையில் அங்குசேவை ஆற்றும் பிரான்ஸ் வைத்தியக்குழு நாளொன்றுக்கு 20லீற்றர் டீசலை வைத்திய (4 ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 02 உ செவ்வாய்க்கிழமை (18-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 27 ஓசை 212

# சிறிலங்கா அரசாங்கத்தின்மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு

## "இந்திய அமைதிப்படையும்" மனித உரிமைகளை மீறியது

(லண்டன்)

சிறிலங்கா இராணுவம் கடந்த மூன்று வருடத்தில் பெருமளவினதான மனித உரிமை மீறல்களைச் செய்துள்ளதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது அத்தோடு இந்திய அமைதிப்படையும் இலங்கையில் மனித உரிமைகள் மீறல்களைச் செய்ததாக அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

லண்டனில் அடுத்தமாதத் தொடக்கத்தில் வெளியிடப்படவிருக்கும் 510பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1987 தொடக்கம் 1990ஆம் ஆண்டுவரை இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல் தொடர்பான சம்பவங்களை அந்த அறிக்கை தெளிவாக விளக்குகிறது.

இலங்கையில் சட்டவிரோதமான முறையில் நடந்த கொலைகள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைச் சபை ஒன்று அமைத்து விரிவான அறிக்கை ஒன்றை இலங்கை அரசு வெளியிட வேண்டும் என்றும் அந்த அமைப்புக் கோருகிறது.

தெற்கில் ஜே வி. பி. இயக்கத்தினருக்கெதிராக எனவும், (4 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சக் கொடியில் ஏழு ஊர்காவற்படை பலி

(வவுனியா)

வவுனியாவில் கச்சக்கொடி என்ற இடத்தில் நேற்று முன்தினம் ஊர்காவற் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் 7 ஊர்காவற் படையினர் உயிரிழந்தனர்.

## மீனவர் சுடப்பட்டதற்கு கருணாநிதி கண்டனம்

(சென்னை)

இந்திய மீனவர் சிறிலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்படுவதைத் தமிழக முதல்வர் மு. கருணாநிதி கண்டித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தமிழகம் வந்த பாரதப்பிரதமர் வி பி. சிங்கிடம் தாம் இதுபற்றி எடுத்துரைத்திருப்பதாக முதல்வர் கருணாநிதி நேற்று சென்னையில் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சமீபத்தில் தமிழக மீனவர்கள் மூவர் இராமேஸ்வரக் கடற்பிரதேசத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே.

## இளம் பெண்கள் மீது இராணுவம் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா குருமன்காடு பகுதியில் இரு பெண்கள் உட்பட நால்வர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த 12ஆம் திகதி குருமன்காடு பகுதியில் உள்ள தமது வீடுகளைப் பார்க்கச் சென்றவர்களே கைதுசெய்யப்பட்டனர்.

பிந்திக்கிடைத்த தகவலின்படி இராணுவத்தினரால் தாக்கப்பட்ட நிலையில் இரு பெண் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியில் ஹெலித்தாக்கு இளம்பெண் உட்பட இருவர் பலி

(வவுனியா)

நெடுங்கேணி நைனாமடுவில் இடம்பெற்ற ஹெலித் தாக்குதலில் ஓர் இளம்பெண் உட்பட இருவர் இறந்தனர்.

இச்சம்பவம் கடந்த 11 ஆம் திகதி காலை இடம்பெற்றது.

கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்பு வழியாக நெடுங்கேணி வந்து வவுனியாவிலிருந்து கொழும்பு செல்லும் நோக்குடன் மினிவானில் வந்தவர்களை நோக்கி ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதிலேயே மேற்படி இருவரும் இறந்தனர். சிலர் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரிக்குளம் பகுதியில் மூன்று இராணுவம் பலி

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில், புலிகளினால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளைச் செயலிழக்க வைக்கும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டபோது விடுதலைப் புலிகள் அவர்களை நோக்கி தாக்கியதில் மூன்று இராணுவ வீரர் கொல்லப்பட்டனர். மேலும் சிலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் 12ஆம் திகதி இடம் பெற்றது

மேற்படி மிதிவெடிகளை செயலிழக்க வைக்கும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டபோது சில இராணுவத்தினர் மிதிவெடியால் கால்களை இழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையில் இரு இராணுவம் பலி

(யாழ்ப்பாணம்)

கோட்டை இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை 11 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர்த் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து கோட்டையிலுள்ள இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

## சுதாசினி வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று இராணுவத்தினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் சுதாசினி வீரமரணமடைந்தார். அவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

## மத்திய அரசு அகதிகள் செலவை பொறுப்பேற்கின்றது

(சென்னை)

இலங்கைத்தமிழ் அகதிகள் பராமரிப்பிற்காக தமிழ்நாட்டு அரசு கோரியுள்ள மூன்று கோடி ரூபா வழங்கப்படும் என சென்னை வந்த இந்தியப் பிரதமர் வி. பி. சிங் தெரிவித்துள்ளதோடு, இதுவரைதமிழ்நாட்டு அரசால் அகதிகளுக்கு என செலவிடப்பட்ட தொகை மத்திய அரசால்வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு 10,000 குடிசைகள் அமைத்துக் கொடுக்கவும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் அரசுக்கு உதவுவதால் ஆயுதத்துடன் நடமாடலாம்

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் இருக்கும் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிகளுடன் நடமாடினால் அது மோதல் நிலையை ஏற்படுத்தும். ஆகவே குறிப்பிட்ட ஓர் இயக்கம் வவுனியா நகரப் பகுதியில் துப்பாக்கிகளுடன் நடமாடுவது தடை செய்யப்பட வேண்டும்.

வவுனியாவில்அரசாங்க அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மட்டத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் வவுனியா (4 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழர் பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்த

## விரைவில் வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் இலங்கை செல்வார்

– பிரதமர் வி. பி. சிங்

(சென்னை)

சிறிலங்கா விமானப்படைக் குண்டு வீச்சு விமானங்களின் குண்டுவீச்சால் இன்னல் உறும் தமிழ் மக்களின் அவலநிலை கண்டு தான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக இந்திய பிரதம மந்திரி வி. பி. சிங் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய ஐம்பெரும் விழாவில் கலந்து கொண்டு பேசிய இந்தியப்பிரதமமந்திரி வி. பி. சிங் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இலங்கை அரசுடன் பேசசுவார்த்தைநடத்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஐ. கே குஜ்ரால் வெகுவிரைவில் இலங்கை செல்லவிருக்கிறார் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் அடுத்தமாதம் மாலைதீவில் நடைபெறவிருக்கும் 'சார்க்' உச்சி மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவுடன் இப்பிரச்சினை பற்றி விரிவாகப் பேசவுள்ளதாகவும் குறிப்பிட்ட வி பி சிங் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்தும். யாழ். குடாவிலும் கிழக்குப் பிரதேசத்திலும் மக்களின் அவசர உணவின் விநியோகத்தை பராமரிக்கவும் தகுந்த நடவடிக்கை (4 ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

### இடம் மாற்றம்

இராசா டீசல் என்ஜினியர்ஸ். 180, பருத்தித்துறை வீதியிலிருந்து தற்காலிகமாக 28/3, மணல்தறை லேன், கந்தர்மடம் யாழ்ப்பாணத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (R-630)

### போட்டோஸ்ரட்

போட்டோஸ்ரட் பிரதிகளை பெற்றுக்கொள்ள கிளீன்கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். வேலை நேரம் 10 மணிக்கும் 3 மணிக்கும் இடையில். (R-631)


# சாவகச்சேரியில் திலீபனுக்கு நினைவஞ்சலிப் பந்தல்கள்

(சாவகச்சேரி)

1987ஆம் ஆண்டு தமிழீழத்தின் விடிவுக்காக உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த லெப். கேணல் திலீபனுக்கு தென்மராட்சிப் பகுதியில் மூன்றாம் ஆண்டு நினைவு நாட்களை ஒட்டி வீதிகளில் தோரணங்களும், அஞ்சலிப் பந்தல்களும் அமைத்து அலங்கரிக்கப்பட்டுள்ளன.

உண்ணா நோன்பு ஆரம்பித்த முதல் நாளான கடந்த சனிக்கிழமை 18ஆம் திகதி காலை பத்துமணி பத்து நிமிடத்திலிருந்து சாவகச்சேரி நகரின் மத்தியில் அனைத்தும் இரண்டு நிமிடம் ஸ்தம்பித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. வீதியில் சென்று கொண்டிருந்தவர்கள் அந்தந்த இடங்களிலேயே நின்று தமது மௌன அஞ்சலியை செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து சிவப்பும் மஞ்சலும் கலந்த தோரணங்களால் சோடிக்கப்பட்டு நகரின் மத்தியில் ஒலிபெருக்கி மூலம் புரட்சி கீதங்கள் ஒலிபரப்பப்பட்டது.

சாவகச்சேரி மட்டுமல்லாது கொடிகாமம், மிருசுவில், நாவற்குளி, கைதடி ஆகிய அனைத்து இடங்களிலும் இதேபோல் வாழைமரங்களாலும், தோரணங்களாலும் சோடிக்கப்பட்டுள்ளது. (லே.)

# திலீபனின் நினைவாக......



திலீபன் ஜனனம்

அந்நியர் ஆட்சியில் அடிமையாய்க் கிடந்து
நம்மினத்தவரோ நலிவாய் வாழ - எம்
மண்ணினை மீட்டிட மடிவேன் என்றாய்
உண்டி தவிர்த்தாய் உரிமையைக் கேட்டாய்...

ஒன்றா, இரண்டா, ஒருசில நாளா?
பன்னிரு நாளா(ய்) பசித்தே உதிர்ந்தாய்
தாகம் என்றால் தாயகம் என்றாய்
தேகம் தவிர்த்தாய் தியாகி ஆனாய்...

என்று கோட்டையில் ஏறுமோ புலிக்கொடி
அன்றே அடிமை வாழ்வும் அழியும்
நன்றே சொன்ன நாயகன் நீயே...
இன்றிதை உணர்ந்தோம் எழுந்தோம் வெல்வோம்...

ஆயிர மாயிரம் ஆண்டுகள் மடியும்
ஆயினும் உன் உயிர் நிலைக்கும், வாழும்
பாயும் புலிகள் தாயகம் மீட்பர்..
தாயகத் தாயின் சேயாய் ஜனிப்பாய்...

கோகுலன்

## பூநகரி பாடசாலைகளில் அகதி முகாம்கள்

பூநகரி ஜெயபுரம் பாடசாலையில் தஞ்சமடைந்துள்ள 229 குடும்பங்களைச் சேர்ந்த அகதிகளை சர்வோதய இயக்கம் முன்வந்து பொறுப்பேற்று அவர்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து வருகின்றது. (24)

## குவைத்தியர்கள் அகதிகளாக சவுதிக்கு

(றியாட்)

குவைத்துடனான சவுதி அரேபிய எல்லையை சவுதி அரேபிய அரசாங்கம் திடீர் என நேற்று முன்தினம் திறந்துவிட்டதைத் தொடர்ந்து பல ஆயிரக்கணக்கான குவைத்தியர்கள் சவுதி அரேபியாவிற்கு அகதிகளாகச் சென்றவண்ணமுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வவுனியா தபாலகம் இயங்கவைக்க முயற்சி

(வவுனியா)

வவுனியாவில் தபால்சேவையை மேற்கொள்வதற்கு அரச அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதிக்குப் பின்னர் வவுனியாவில் தபால் சேவை சீர்குலைந்திருப்பதும், மீண்டும் தபால் சேவையை மேற்கொள்ளும் முகமாக வவுனியா பிரதான தபால் நிலையத்தை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுககப்பட்ட போதிலும் குறிப்பிட்ட தபால் நிலையத்திலிருந்து ஆவணங்களும், பொருட்களும் திருடப்பட்டிருக்கும் காரணத்தினாலும், ஊழியர்கள் இடம் பெயர்ந்து சென்றிருப்பதாலும் பிரதம தபாலகத்தை இயங்க வைக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

இதன் காரணமாக வவுனியா பிரதம தபாலகத்திற்குப் பதிலாக வவுனியா கச்சேரியின் ஒரு பகுதியில் தபாலகம் ஒன்றை இயங்க வைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா பிரதம தபாலகத்தின் காசாளராகப் பணிபுரிந்த அ. பரமானந்தன் புதிதாக செயற்பட உள்ள தபாலகத்தின் பொறுப்பை ஏற்கவுள்ளார். (தி)

# உணவு முத்திரைப் பொருட்கள் வழங்கப்படவில்லை

(வவுனியா)

வவுனியாவில் இம் மாதத்திற்கான கூட்டுறவு உணவு முத்திரைக்கான பொருட்கள் கூட்டுறவுக் கிளைகளில்வழங்கப்படவில்லை.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவுகூட்டுறவுச்சமாஜத்திற்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருப்பதும், வவுனியா கச்சேரியில் சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான உணவு முத்திரைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும். அவற்றுக்கான பணம் கச்சேரியினால் வழங்கப்படவில்லை என்பதும் தெரிந்தது.

இந்தக் காரணத்தினால் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு கூட்டுறவு ஊழியர்களுக்கான கடந்த மாதச் சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நிதி நெருக்கடி காரணமாகவும், வவுனியா அரச உணவுக் களஞ்சிய அறையில் பொருட்கள் முடிந்துள்ள காரணத்தினாலும், குறிப்பிட்ட கூட்டுறவுக் கிளைகளில் பொருட்களுக்குதட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யூ.என் கிளைகளில் எதுவித பொருட்களும் இல்லாதிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (தி)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பச்சைக் குருதியினால் பைந்தமிழர் காவியத்தைப்
படைக்கும் நாள் ஒன்றிங்கே கூடும்போது
நிச்சயமாய் இம்மண்ணில் நெருப்பு மூளும்
நீசத்தன மனைத்தும் அதனில் வீழும்
நச்சுப் பாம்புகள் நம்மைவிட்டு ஓட.....
நல்ல தொரு நேரம் புலரும்... புலரும்;
அச்சமெல்லாம் அகன்று நீதியோங்க
அச்சான 'தமிழீழம்' மலரும்.... மலரும்

போர்ப் பரணிமுழங்கட்டும்; புத்துணர்வு பிறக்கட்டும்
புலிகளது வெற்றியொலி பூமியெங்கும் அதிரட்டும்
தேர் மீது வந்து திலீபனவன் மலர் தெளிப்பான்;
திக்கெல்லாம் தமிழர்படை திரளட்டும்;
பார்மீது அடிமைப் பெருமலையைப் பெயர்த்திடுவோம்;
பல முள்ள சமுதாயம் படைத்திடுவோம்;
ஓர் நாளில் இம்மண்ணில் உரிமையுடன் நாம் வாழ
உயர் திலீபன் மேலிருந்து வாழ்ந்திடுவான்!

— மு. வே. யோ. வாஞ்சிநாதன்

கெருடாவில் வடக்கு,
வல்வெட்டித்துறை வடமேற்கு,
வல்வெட்டித்துறை வடமத்தி,
வல்வெட்டித்துறை தென்மேற்கு.

சிற்றூரவைகள்

(B/1390)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 14 - 11 - 1973 | 05 - 08 - 1990 |

2ஆவது லெப்ரினன்ட் **சரத்பாபு**

**(கந்தசாமி அகிலேஸ்வரன்)**

''மண்மாதா துடிக்கின்றாள் — எம்
மக்கள் இன்னும் அடிமையாசவ?''
என்பதனை நினைத்தாய் மனத்தில்
ஆயுதத்தை ஏந்தினாய் கரத்தில்
வீறுகொண்ட வேங்கையானாய்
வெற்றி கிட்டப் பாடுபட்டாய்
கோட்டையிலே கொடியேற்றி
குதூசலிக்கக் காத்திருந்தாய்!
வெற்றிகிட்டும் முன்பாக
வீரமரணம் அடைந்துவிட்டாய்!
எத்துணை தயரின் பத்தியிலும் — உன்
உயரிய வழியில் நாம் நடப்போம்!

05. 08 1990 அன்று கோட்டையில் இவருடன் வீரமரணமடைந்த சகபோராளிகளுக்கும் எம் வீர அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

செருக்கப்புல லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, தம்பி மற்றும்
உறவினர்கள், நண்பர்கள்

(R. 6-9)

## வாடியடியில் ஹெலிதாக்குதல்

(ஈச்சமோட்டை)

கடந்த (14.9.90) வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணியளவில் பூநகரி வாடியடி பகுதியில் ஹெலியில்இருந்துமிகவும் மோசமாக இந்தப் பகுதியல் கூடிநின்ற பொதுமக்கள் மீது துப்பாசகிட்பிரயோசம் மேற்கொள்ளப்பட்டது. இந்ததுப்பாக்கிவேட்டுக்களால் லொறி ஒன்று சிறு சேதத்துக்கு உள்ளானதென்றும் லொறியில் இருந்த 3 பீப்பா தேங்காய் எண்ணெய்உடைந்து சேதத்துக்கு உள்ளானதென்றும் சாரதி, கிளீனர் எவருக்கும் காயம்ஏற்படவில்லைஎனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (43)

## சிந்தனைக்கு

வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி
தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப்
பெறுவது தான் சுதந்திரம் – சுதந்திரம்
இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமேயில்லை......

—தலைவர் வே. பிரபாகரன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 18-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த பெ. எண் 05

# சுதந்திரம் இரந்துபெறும் பிச்சையல்ல

சர்வஜன வாக்கெடுப்பின்றியே வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு சர்வகட்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது தமிழர் உரிமைகளைச் சீரழிக்க எதை தனது அடித்தளமாக சிறிலங்கா அரசாங்கம் கொண்டிருந்ததோ அதைக் கைவிட இன்றைய சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளதெனலாம.

அதற்கும் மேலாகக் கூறுவதென்றால் ஒற்றையாட்சி அமைப்பிலிருந்து சமஷ்டி ஆட்சி அமைப்பிற்குரிய மாற்றத்திற்கு சிறிலங்கா அரசாங்கம் தயாராகின்றது எனலாம்.

சிறிலங்கா அரசாங்கத்தின் மாற்றம் இன்று சடுதியாக ஏற்பட்டதொன்றல்ல. இம்மாற்றத்திற்கு சிறிலங்கா அரசாங்கம் வருவதற்கு தமிழர் ஆயிரக்கணக்கான போராளிகளையும், பல ஆயிரக்கணக்கான மக்களையும் பலகோடி பெறுமதியான சொத்துக்களையும் இழக்க நேரிட்டது.

பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறிய பின் தமிழர்கள் தமது உரிமைக்காக சாத்வீகப் போராட்டங்களை நடத்தினார்கள். அது வெற்றி பெறவில்லை.

தமிழர் போராட்டங்களால் நெருக்கடிகள் உச்சநிலை அடைந்தபோது எவ்வளவு சிறிய நிர்வாக அலகு அதிகாரங்களை வழங்க முடியுமோ அவற்றை வழங்கி தமிழரின் போராட்டத்தை மழுங்கடிக்கவே சிறிலங்கா அரசு விரும்பியது. அவ்வாறு போராட்டத்திற்கு தீர்வாக வைக்கப்பட்டவையே மாவட்ட சபைகள், மாகாண சபைகள் என்பனவாகும்.

அதேவேளை மறுவளமாக தமிழ் மக்களின் மண்ணை அபகரிக்கவும், அவர்களின் பரந்த தொடர் நிலப்பரப்பையும் துண்டாடவுமே சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்பட்டது.

உலகில் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட எந்தமண்ணும் ஆக்கிரமிப்பாளர்களால் விடுவிக்கப்பட்டதாக வரலாறே இல்லை. அவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணுக்கு அயர்லாந்தில் அல்ஸ்ரர், மேற்காசியாவில் பாலஸ்தீனம், கனடாவில் நியூ புறுன்ஸ் வீக் மாகாணம் என்பன சிறந்த உதாரணங்களாகும். ஆனால் இன்று இலங்கையில் மட்டுமே ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணை விட்டுக்கொடுக்க முன்வராவிட்டாலும், அதிகாரத்தை விட்டுக்கொடுக்க ஆக்கிரமிப்பாளர் முன்வந்துள்ளனர்.

ஒவ்வொரு போராட்டமும் நிகழும்போதும் அதை முறியடிக்க எண்ணும் எதிரி மிகவும் குறைந்தபட்ச தீர்வையே முன்வைப்பான். அதன் பிரகாரமே இலங்கையில் அன்று 1981 ஆம் ஆண்டு மாவட்ட சபைகளும் பின்னர் மாகாணசபையும் தீர்வாக முன்வைக்கப்பட்டன.

தமிழர் எவ்வளவோ சாத்வீகப் போராட்டம் நடத்தியும், இந்தியா எடுத்துக் கூறியும் வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ளாத சிறிலங்கா அரசாங்கம் இன்று இணைப்பிற்கு கொள்கையளவில் ஒத்துக்கொண்டுள்ளது.

இதற்கு விடுதலைப் புலிகளின் விட்டுக் கொடுப்பற்ற போராட்டமே காரணமேயொழிய வேறொன்றுமில்லை.

அன்று இரந்து கேட்டபோது உதைத்தவர்கள் இன்று அடிக்கும்போது கொடுப்பதற்கு முன்வருகின்றார்கள் என்றால் தமிழருக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அல்ல. தமிழரின் போராட்டத்தைத் தணிக்கவே இம்முடிவிற்கு வருகின்றார்கள். ஆனால் இன்றைய நிலையில் இது மிகவும் குறைந்தபட்சதீர்வே.

சுதந்திரம் இரந்து பெறும் பிச்சையல்ல. அதைப் போராடிப் பெற வேண்டும். அப்பொழுதே அதன் மகிமை உணரப்படும்.

# வெளிநாட்டவருக்கு உணவு வழங்க ஈராக் மறுப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கிலுள்ள வெளிநாட்டு மக்களுக்கு உணவு வழங்குவதற்கான ஐ நா. சபையின் நடவடிக்கைகளை ஈராக் மறுத்துள்ளது.

ஈராக்கின் இந்த மறுப்புக்கு ஐ. நா. சபை பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது. ஈராக்கின் இந்த நடவடிக்கையினால் ஐ. நா. சபை மீண்டும் ஈராக் மீது பலத்த நடவடிக்கை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தது.

இதேவேளை ஐ. நா. சபை தலைமைச் செயலாளர் பெரஸ்டி குயிலரின் தனிப்பட்ட தூதரையும் ஈராக் மறுத்துள்ளது.

# “நான் மீட்கப்படமுடியாத இடத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறேன்”

16. 09. 1987

- திலீபன் உண்ணாவிரதமிருக்கத் தொடங்கி இரண்டாம் நாள்
- உடலில்சோர்வு, மனதில் என்றும் மாறாத வைரம், உறுதி இலட்சியப் பற்று......
- முன்னே திரளாக இருந்த மக்கள் கூட்டத்தினரிடையே, மேடையில் இருந்தபடி பேசுகிறார் ..
- சோகம் ததும்பும் முகங்களுடன், நீர் சொரியும் விழிகளுடன் அவரது பேச்சைக் கேட்கும் மக்கள் .....



எனது அன்பிற்கினிய மக்களே! என்னால் பேச இயலவில்லை. அறிவித்து விட்டார்கள்; அதனால் பேச முயலுகிறேன். உங்களை ஏமாற்றக் கூடாது என்பதற்காக பேசுகிறேன். உண்மையாகவே என்னால் பேசமுடியவில்லை.

நான் இப்போது மகிழ்ச்சியில் மிதக்கிறேன். நீங்கள் பல்லாயிரக் கணக்கில் என் முயற்சிக்கு ஒத்துழைப்பு தந்திருப்பதை என்கண்கள் பார்க்கின்றன. பேசமுடியாத நிலையில் இருக்கும் என்னை நீங்கள் தரும் உற்சாகம் பேச வைக்கின்றது. மறியல் போராட்டம் வெற்றிகரமாக நடைபெறுகின்றது என்று அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

‘நான் மீட்கப்படமுடியாத இடத்துக்குச் சென்றுகொண்டிருக்கிறேன். உங்களை விட்டுச்செல்லும் நிலைக்குக்கொஞ்சம் கொஞ்சமாக வந்துகொண்டிருக்கிறேன்,

நான் வாழ்நாள் பூராகவும் நேசித்த மக்களே! நீங்கள் என் முன்னே நிறகிறீர்கள். சாகும் வேளையில் மகிழ்ச்சியுடனே இருக்கிறேன். மகிழ்ச்சியுடனே சாகிறேன்’ என்று திலீபன் தனது உரையில் குறிப்பிட்டார். மக்களின் அழுகுரல் இதற்குமேல் அவரை பேச முடியாமல் செய்துவிட்டது.

# மக்கள் புரட்சி வெடிக்கட்டும்

17. 09. 1987

- நேற்றைய தினத்தை விடச் சோர்வுடன் இருந்தாலும். தீலீபன் பேசுவார்
என்று அறிவித்ததை கௌரவித்து, இயலாமையிலும், இறுதியும், உறுதியுமிக்க இலட்சிய வேட்கை உந்த தாயகத்து மக்கள் முன்னால் பேசுகிறார்......
- அடக்கமுடியாத் துயருடன் அலைமோதும் மக்கள் அசைவற்று நிற்கின்றனர்
- தியாகச் சுடரின் ஒளியில் திலீப தீபம் சிந்தும் வார்த்தைக் கதிர்கள் அவர்கள் இதயங்களை ஊடுருவுகின்றன.

பலர் என்னை இந்த உண்ணா விரதத்தை கைவிடுமாறு கோருகின்றனர். ஆனால் நான் நேற்றிருந்ததை விட இன்று உற்சாகமாகவே இருக்கிறேன். என்று நேற்று நான் காவது தினமாகச் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவுப் பொறுப்பாளர். திரு. இ. திலீபன் கூறினார்.

விளக்கு அணைய முன்பு பிரகாசமாக எரியுமாம். அது போல இன்று நானும் உற்சாகத்துடன் இருக்கிறேன் என்பது தெரிகிறது. இன்று தாராளமாக பேச முடிகிறது.

போராட தயாராகுங்கள்! எனக்கு விடைதாருங்கள்

ஒருவரும் என்னை இந்த போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்க வேண்டாம்.

## போராடத்தயாராகுங்கள்! எனக்கு விடை தாருங்கள்!

நானும் எனது தலைவரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் இது.

மறைந்த போராளிகள் அறுநூற்றிஐம்பது பேருடன் சேர்ந்து அறுநூற்று ஐம்பத்தோராவது ஆளாகி மேலிருந்து பார்ப்பேன். எங்கள் உயிர் உங்களுடன் ஒட்டிவிடும். என்னைப்பற்றிக்கவலைப்படாதீர்கள்.

எனது அவயவங்கள் செயலிழப்பதனால் இனிமேல் மனிதனாக வாழமுடியாது. என்பது எனக்குத் தெரியும்.

எமது வீரர்கள் ஒவ்வொருவரும் கொள்கைக்காக உயிரைக்கொடுப்பவர்கள் கொள்கைக்காக என்னைத் தொடர்ந்து வாருங்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் நான்கு ஐந்து பேர் சாவதால் எவ்வித தீங்கும் வந்துவிடாது. மக்கள் புரட்சி வெடிக்கட்டும் நான் மூன்று தடவைகள் பேசியுள்ளேன். மூன்று தடவையும் ஒரே கருத்தைததான் பேசினேன். இவ்வாறு கூறினார்.

வளைகுடாவில் நிலை கொண்டுள்ள

# அமெரிக்க விமானப்படை ஈராக்கை அழிக்கும் வல்லமை கொண்டது

(நியூயோர்க்)

ஈராக்கிய தலை நகரான பாக்தாத்தில் உள்ள கலைப் பொக்கிசங்கள் அடங்கிய நிலைகளைத் தவிர ஏனைய பகுதிகள்யாவற்றையும் உடன் தாக்கி அழிக்கும் வல்லமையை வளைகுடாப் பகுதியில் நிலை கொண்டுள்ள அமெரிக்க விமானப்படைவிமானங்கள் பெற்றிருப்பதாக வளைகுடாப்பகுதியில் நிலை கொண்டுள்ள அமெரிக்க விமானப்படைகளுக்குத் தளபதியாக உள்ள மைகசல்டகன் வாசிங்டன் போர் பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

### தளபதிமைக்கல் டகன்

மேலும் கருத்து வெளியிட்ட டகன் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உஷைனை அமெரிக்க விமானப்படை தேடி அழிக்கும் எனவும் தெரிவித்தார்.

# ரோமில் இருந்தும் ஈராக்கிய அதிகாரிகள் வெளியேற்றம்

(ரோம்)

குவைத்திலுள்ள இத்தாலிய தூதரகத்திறகுள் ஈராக்கியப் படைகள் புகுந்ததைத் தொடர்ந்து ரோமில் இருந்த ஈராக்கியத் தூதரக இராணுவ அதிகாரிகளை நாடு கடத்த இத்தாலிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதேபோன்றே பிரான்சில் இருந்தும் ஈராக்கிய தூதரக அதிகாரிகள் வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதே வேளை ஐ நா. வின் தீர்மானங்களை ஈராக் தொடர்ந்தும் அசட்டை செய்து வருமானால், மேலும் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி வரும் என அதன் ஐ. நா. செயலாளர் நாயகம எச்சரிக்கை செய்துள்ளார்.

தனது தூதரகங்களுக்குள் புகுந்தது தொடர்பாக ஆத்திரம் அடைந்துள்ள பிரான்சின் ஜனாதிபதி மித்ரோங் ஈராக் மீதான, கப்பல்போக்குவரத்திற்கும் ஐ நா. தடை விதிக்க வேண்டும் எனறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# குவைத்திற்கு இந்திய சரக்குக் கப்பல்

(டில்லி)

குவைத்திலும், ஈராக்கிலும் சிக்கியுள்ள இந்தியர்களுக்கு 6000 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு இந்திய சரக்குக் கப்பல் ஒன்று நேற்று முன் தினம் புறப்பட்டுச் சென்றது. அதில் இந்தியச் செஞ்சிலுவை அதிகாரிகள் பதினொருபேரும் செல்கின்றார்கள்.

# நேற்றும் யாழ். நகர் மீது நேபாம் குண்டு வீச்சு!

(யாழ்நகர்)


யாழ். நகரில் நேற்றும் தொடர்ந்து நேபாம் குண்டுகள் வீசப்பட்டன. இவை பெரும்புகை மண்டலமாக சிதைந்துநாசமாகிவிட்ட யாழ் நகரின் மேலாக எழுந்தது. பலமைல் தொலைவுகளுக்கப்பால் நின்றுபார்க்கும்போது, யாழ்நகரின்மேல் கரியநிற குடை விரித்துவிட்டது போன்றதோர் காட்சியைத் தோற்றுவித்தது.

காலை ஒன்பதுமணியளவில் இரண்டு அவ்ரோவிமானங்கள் யாழ்நகரைச் சாம்பராக்கும் வேலையில் மாறிமாறி ஈடுபட்டன. இதனைத் தொடர்ந்து மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி இரண்டு ஹெலிக்கொப்டர்கள் ''றொக்கட்'' தாக்குதலையும் பெரும் துப்பாக்கி வேட்டுகளையும் தீர்த்தன. இதனால் மயானஅமைதியாக இருந்த நகர் துப்பாக்கி வேட்டுக்களால் அதிர்ந்தது.

தொடர்ந்து விமானங்கள் மாறிமாறி குண்டுகளை வீசி யாழ்நகரை அழிப்பதில் கண்ணும கருத்துமாக ஈடுபட்டன.

ஹெலிக்கொப்டர்கள் பெரும்பாலும் நாச்சிமார் கோவில், ஓட்டுமடம்சந்தி, குருநகர், நாவலர்வீதி ஆகிய இடங்களிலும் கொழும்புத்துறை, மணியம் தோட்டம் ஆகிய இடங்களிலும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தன.

மாலையில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் நகருக்குள் பிரவேசித்துக் குண்டுகளை வீசின. (லோ)




## வவுனியா வைத்தியசாலைக்கு மக்கள் செல்வதற்கு அச்சம்

(வவுனியா)

வவுனியா அரச வைத்தியசாலை இயங்க வைக்கப்பட்டபோதிலும் அங்கு சென்று சிகிச்சை பெறுவதற்கு நோயாளிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தினரின் பல காவல் அரண்களைத் தாண்டிச் சென்று சிகிச்சை பெறுவதற்குப் பல மணிநேரம் எடுப்பதாகவும், திடீர் என்று இராணுவத்தினரும், முன்னர் இந்திய இராணுவத்தினருடன் ஒட்டி உறவாடிய ஆயுதக் குழுக்களும் தாக்குதலில் ஈடுபட்டால் தப்பிச்செல்ல வழி இல்லை என்றும் பொதுமக்கள் புகார்தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சிங்கள நோயாளிகளே அதிகம் சிகிச்சையைப் பெறுகின்றனர்.

இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மட்டுமே இயங்குகின்றது என்பதும் மருந்து மற்றும் ஊழியர் பற்றாக்குறை நிலவிவருவதும், மூன்று வைத்தியர்கள் மட்டுமே பணிபுரிகின்றார்கள்என்பதும் குறிப்பிடத்தக்கது. (தி)

## விழிப்புக்குழு உறுப்பினரின் திருட்டு

(அச்சுவேலி)

அச்சுவேலி தொழிற்பேட்டையில் விழிப்புக் குழுவில் ஊர்காவல் கடமையில் ஈடுபட்டிருந்தவர் மின் மாற்றியில் 'ஒயில்' திருடும்போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

அச்சுவேலிச் சிற்றூரவைப் பிரதேசமான தொழிற்பேட்டையில் விழிப்புக்குழு காவல் கடமைக்கு விடப்பட்டிருந்த ஒருவர் நடுநிசியில் அப்பகுதியில் இருந்த மின் மாற்றியின் ஒயில் கொள்கலனின் மூடியைத் திறந்து அதற்குள் இருந்த ஒயிலை வெளியே எடுத்து வீடுகொண்டு செல்லமுற்பட்ட சமயம் அவருடன் கடமையில் ஈடுபட்டிருந்த விழிப்புக் குழுவினரால் பிடித்து அப்பகுதிப் பிரதேசப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டார். இவர் இப்பொழுது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

## கல்வித்திணைக்களம் பொதுநூலகம் கொள்ளை

(வவுனியா)

வவுனியா நகரசபைக்குரிய பொது நூலகசாலை உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பெறுமதிவாய்ந்த புத்தகங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இதுசம்பந்தமாக மேற்படி நூலகத்தின் பொறுப்பதிகாரி வவுனியா பொலிஸில் புகார் தெரிவித்துள்ளார்.

மேற்படி அதிகாரியின் புகாரைஅடுத்துஇந்த நூலகசாலை மறுபடி பூட்டப்பட்டு பொலிஸாரினால் முத்திரை குத்தப்பட்டுள்ளது.

வவுனியா கல்வித்திணைக்களத்தின் கதவுகளும் உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பெறுமதிவாய்ந்த பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட திருட்டுவேலைகளுக்கும் சிங்களமக்களுக்கும் எதுவித தொடர்புமில்லை என்று இராணுவத்தினரே இந்தநடவடிக்கைகளில்ஈடுபட்டனர் என்றும் அறியப்படுகிறது. (தி)

## பயிர்ச் செய்கைக்கென நிலம் வழங்கும் திட்டம்

பயிர்ச்செய்கையில் ஈடுபடவிரும்பும் நிலமற்றவர்களுக்கு பயிர்ச்செய்கைக்கான நிலம்வழங்க விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி திட்டமிட்டு வருகின்றது: விபரங்கள் நாளைய ஈழநாதத்தில் வெளி வரும்.

## சங்கக்கடையில் சச்சரவு

(வண்ணார்பண்ணை)

ஆறுகால் மடத்தடியிலுள்ள சங்கக்கடை ஒன்றில் நிவாரணப் பொருட்கள் வாங்கச் சென்ற ஒருவருக்கும் மேற்படி சங்கக்கடைக் குழுவில் உள்ள இரு பெண்களுக்குமிடையில் ஏற்பட்ட வாய்ச்சண்டை அடிபிடியில் முடிந்தது. பெண்களினால் அவர் செருப்பினாலும் தாக்கப்பட்டாராம்.

நிவாரணப் பொருட்களை பெறுவதற்குக் கிராமசேவையாளரால்வழங்கப்பட்ட இலக்கங்களை இரு பெண்களும் நிராகரித்து தாம் இலக்கங்களை வழங்க முற்பட்டபோதே மேற்படி கைகலப்பு ஏற்பட்டது.

விடுதலைப்புலிகள் இச்சம்பவம் தொடர்பாக விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

## தபால்கள் நாளை செல்கின்றன

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலிருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் தபால்கள் நாளை பருத்தித்துறை போகின்றன.

நாளை புறப்படும் என எதிர்பார்க்கப்படும் சப்பலில் இந்த தபால்பொதிகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட உள்ளன. (லோ)

## அகதி முகாம்களிலும் திலீபனின் நினைவஞ்சலி

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ள அகதி முகாம்களில் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. மலர்களினாலும், தோரணங்களாலும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு 24 மணி நேரமும் அணையாத ஒளிவிளக்கு ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளினால் உடைமைகள் பலவற்றை இழந்து உணவுத் தட்டுப்பாட்டினாலும், வேறு பல கஷ்டமான நிலையில் அகதிமுகாம்களில் தங்கியிருந்தும் கூட மக்களுக்காக உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்த திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதில் ஆர்வமாகவுள்ளனர். (க)

### இளம் பெண்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர் என்றும் சரவணபவானந்தன், கிருஷ்ணமூர்த்தி பிரபாகரன் ஆகிய குடும்பஸ்தர் இருவரும் இராணுவ முகாமில் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

### நெடுங்கேணியில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே தினம் நெடுங்கேணி பகுதியில் பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல் சம்பவத்தில் சில கட்டடங்கள் சேதமடைந்தன என்று கூறப்பட்டது.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த அருளானந்தன் கலா (28) என்ற இளம் பெண்ணே குறிப்பிட்ட ஹெலித்தாக்குதல் சம்பவத்தில் இறந்துள்ளார். மற்றவரின் விபரம் தெரியவரவில்லை. (தி)

### பண்டாரிக் குளம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின் மூன்றுபவல்இராணுவகவச வாகனத்தில் வந்த இராணுவத்தினர் தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டு, இறந்தவர்களின் சடலங்களை எடுத்துச் சென்றனர் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (தி)

### சிறிலங்கா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கில் புலிகளுக்கு எதிராக எனவும் எடுத்த இராணுவ நடவடிக்கைகளில் பல மனித உரிமை மீறல்களைச் செய்ததாக அவ்வமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

அரசுக்கெதிரான வன்முறைகளுக்குப்பதிலடியாக அனைத்துப் பிரிவினர்மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதெனவும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிக்கை கூறுகிறது.

அரசாங்கம் படைக்கு விரிவான அதிகாரங்களைஅளித்த தன்மூலம் அரசாங்கம் வன்முறைக்குத் தூபமிட்டுள்ளது என்றும் அவ்வறிக்கை சிறிலங்காஅரசைக் குற்றம்சாட்டுகின்றது.

கடந்த மார்ச் மாதத்திலிருந்து ஆயுதப் படையினரின் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளதெனக் குறிப்பிடும் அறிக்கை கல்முனையில் இராணுவம் செய்த படுகொலைகளையும், அகதி முகாமில் இருந்தவர்களையும், பஸ்ஸில் சென்றவர்களையும் கைது செய்து படுகொலை செய்ததைக் குறிப்பிடுகின்றது.

### வைத்தியசாலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாலைக்கு வழங்க முன்வந்துள்ளது.

ஆனால் வைத்தியசாலை சிற்றூழியர்கள் இதனை விநியோகிக்கும் இடத்தில் இருந்து (150 யார் இடைத் தூரம்) எடுத்துவர மறுத்துள்ளதைத் தொடர்ந்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் தாமாகவே முன்வந்து எரிபொருளை வைத்தியசாலைக்கு தினமும் எடுத்துச் சென்று வழங்குகின்றனர்.

### மத்திய

பிரதமர் வி. பி. சிங் சம்மதம் தெரிவித்துள்ளார். அதே வேளை இந்தியாவுக்கு மேலும் அகதிகள் வருவார்களானால் அவர்களும் பாதுகாக்கப் படுவார்கள்எனவும்தெரிவித்தார்

### விரைவில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்குமாறு இலங்கை அரசை தொடர்ந்து இந்தியா வற்புறுத்தும் என்றும் அவர் கூறினார்.

இலங்கைத் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை சீர்குலைக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்தார்.

இதே வேளை இலங்கையில் அகதிமுகாம்கள் அமைக்கப்படுமானால் இந்தியா உதவி செய்யும் எனவும் தெரிவித்தார்.

### புளொட்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக் கோரிக்கைக்கு பதிலளிக்கும் போது புளொட் இயக்கம் அரசுடன் ஒத்துழைப்பதால் அந்த இயக்க உறுப்பினர்கள் துப்பாக்கிகளுடன் நடமாடலாம் என்று வவுனியா இராணுவ அதிகாரி ஒருவரால் தெரிவிக்கப்பட்டது.

அப்படியாயின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் துப்பாக்கிகள் வழங்கலாமே என்று ஒருவரால் கூறப்பட்டபோது, இதை அரசாங்க மேலிடம் தான் முடிவு செய்யவேண்டும் என்று வவுனியா இராணுவ பிரிகேடியரால் கூறப்பட்டது. (தி)

## அகதிகள் தொகை 1,14,000

(சென்னை)

தமிழ் நாட்டில் இலங்கை அகதிகள் தொகை 1 லட்சத்து 14 ஆயிரமாக உயர்ந்துள்ளதென தமிழக முதல்வர் மு. கருணாநிதி நேற்று சென்னையில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

## பொலிகண்டி வைத்தியசாலை இயங்குகிறது

(பொலிகண்டி)

சிறிலங்கா விமானப் படை விமானங்களின் கண்மூடித்தனமான தாக்குதலால் மூடப்பட்டிருந்த பொலிகண்டி அரச மருத்துவமனை மீண்டும் தன் சேவைகளை ஆரம்பித்துள்ளது.

விமானங்களின் தாக்குதலால் வைத்தியசாலை சிப்பந்திகள் சிலர் சாயமடைந்தனர் இதனைத் தொடர்ந்து இவ் வைத்தியசாலையின் சேவை மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருந்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.